# விளக்கு

இதழ்: 04

ஜூன் 2002



20/=

உங்களுக்கும்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கு

யூன் 2002

ஆசிரியர்கள்
த.வேலவன்
மு.மயூரன்

தொடர்புகளுக்கு
ஆசிரியர்,
"விளக்கு"
157,கடற்படைத்தளவீதி,
திருக்கோணமலை.

026-20309

**கட்டுரை**

ஜபார்
தந்தை பெரியார்
மயிலோன்
சந்த்ரராம்

**கவிதை**

ஆகாசன்
எல்லாளன்
கிறிஸ்ரின்
எம்.வை.ராஜ்கபூர்
திருமலை வாசன்
அமுதசுரபி
கௌசி
மிதுஷா

**கடிதம்**

தோழன்

**நேர்காணல்**

ஏ.யதீந்திரா

# விளக்கு

● தேடு ● தெளிவுகொள் ● துணிந்துசொல்

நீ பேசிக்கொண்டிருக்கும் ஒரு வார்த்தையோடு கூட எனக்கு உடன்பாடில்லை. இருந்தாலும் அதைச்சொல்ல உனக்குள்ள உரிமையைக் காக்க நான் சாகவும் சம்மதம்.
- வோல்ட்டேயர் -

வணக்கம்,

சொன்னபடி 01~05~2002 இல் விளக்கின் 4வது இதழை வெளியிட முடியவில்லை. இருந்தாலும் புதுப்பொலிவுடனும், அதிக கனதியுடனும் இம்முறை இதழை ஐந்து மாதங்கள் காத்திருந்து உங்கள் கரங்களில் சேர்த்திருக்கிறோம்.

விளக்கின் தொடர்ச்சிக்கு தூண்களாக விளங்கும் பாடசாலை மாணவர்களை இந்த சந்தர்ப்பத்தில் நாம் நன்றியுடன் நினைவு கொள்கிறோம்.

சீருடைச் சுடர்களே,

பணம் கொடுத்து விளக்கினை வாங்கும் உங்கள் கைகளில்தான் விளக்கின் வளர்ச்சியும் எழுச்சியும் இருக்கிறது.

விற்பனை ஏறலாம், வடிவம் மாறலாம் உங்களுக்குள் அமிழ்ந்து கிடக்கும் அணு உலைப்பொறிகளை ஊதி எரிப்பதே விளக்கின் எப்போதைக்குமான நோக்கம். உங்களுக்கு விளங்கும் மொழியில் எழுதவேண்டும் என்பதே எமது கட்டுரையாளர்களுக்கு நாம் முன்வைக்கும் முதன்மை நிபந்தனை. முண்டியடித்து வாங்குங்கள், முழுமையாகப் படியுங்கள், முடிந்தவரை எழுதுங்கள், உங்கள் எழுத்துக்களை நாடெங்கும் கொண்டுசெல்ல நாங்கள் தயார்.

கடந்து போன ஐந்து மாதங்களில் இலங்கையின் அரசியலில் எத்தனையோ மாற்றங்கள் நிகழ்ந்துவிட்டன. ஆரம்பத்தில் அதீத கதியிலும், அண்மைக் காலத்தில் அடங்கிய கதியிலுமாய் சமாதான முன்னெடுப்புக்கள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. தமிழ்த் தேசிய இனத்திற்காயிருக்கட்டும், முஸ்லீம் தேசியத்திற்காயிருக்கட்டும் இது போர் நிறுத்தக்காலம் அல்ல. அவர்கள் தம் வரலாற்றில் சந்தித்திருக்கும் மிகப் பெரிய போராட்ட காலம். நீதிமன்றத்திலும், பாராளுமன்றத்திலும், வீதிகளிலும் பின்னர் ஆயுதமேந்தி காடுகளிலுமாக வளர்ந்த எம் போராட்டம் இன்று இராஜதந்திரப் போராட்டமாக பரிணமித்திருக்கிறது. எமது ஆயுதமேந்திய ஒரே பிரதிநிதிகளாய் மாறியிருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் கைகளில் எல்லாவற்றையும் பொறுப்புக் கொடுத்துவிட்டு நாம் சும்மா பார்த்துக் கொண்டு இருந்துவிடமுடியாது. உலக வரலாற்றின் விடுதலைப் போராட்டங்கள் நமக்கு நல்ல பாடம். எமது விடுதலை வேட்கையை நசுக்கிவிடவும், எலும்புகளைக் காட்டி ஏமாற்றிவிடவும் நாம் யாருக்கும் வாய்ப்பு வழங்கி விடக்கூடாது. தேசிய விடுதலை எம் தேவை. மானுட விடுதலை நம் நோக்கம். இதை ஒவ்வொருவரும் உணர்ந்து கொண்டால் போராட்டத்தில் எமக்கான பங்கு எதுவெனத் தெரிந்துவிடும். இம்முறை விளக்கில் வந்திருக்கும் ஒரு பேனா தூக்கிய போராளியின் வாசகங்கள்,

மேய்ப்பனே,
எனதருமை மேய்ப்பனே
நம் புல்வெளி நமக்கேயான புல்வெளி
நம் நீர்நிலை நமக்கேயான நீர்நிலை
நமக்கென நிரந்தரிக்கப்படுகிற வரையில்
உம் கைத்தடியை கைவிட,வீச
விடேன், விடோம்.0

உங்களுக்கு புரிந்தாக வேண்டும்.

அன்புடன்
-ஆசிரியர்கள்-

சகல ஆக்கங்களுக்கும் ஆக்கியோரே பொறுப்பாவர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதைப்பற்றியும் பேசலாம்

-ஜபார்-

இச்சிறிய தீவில் நிலவும் அமைதி எந்தப் புள்ளியில் இருந்து தொடங்கியது என்பதை தெரிந்து கொள்ள முற்பட்டால் நோக்கங்கருதி இறுதியாகத் தீர்க்கப்பட்ட இறுதி வேட்டொலியின் இறுதி அதிர்விலிருந்ததாகவே எண்ணத் தோன்றுகின்றது. அந்த அளவிற்கு துல்லியமான களமாடல் தமிழ் தேசியத்தில் ஒரு பலமான அரசியலைக் கட்டமைத்துள்ளதைக் கவனிக்கலாம். இதனது பக்க விளைவுகளிலொன்றே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. இந்நிலைமை தென்னிலங்கை அரசியலில் ஒரு பெரிய மாறுதலையும் அடிப்படை வாதக் கட்டமைப்புகளிலும் இராணுவத்தின் சண்டையிடும் கீழ்மட்ட, மத்திய நிலைப் பிரிவினரிடையேயும் சடுதியான-கணிசமான மனமாற்றத்தையும் கொண்டு வந்துள்ளது. இந்த சந்தர்ப்பம் வலு நேர்மையாகத் தரிசனம் கொண்டு பயன்படுத்தப்படாது போனால் எல்லாவகையிலும் நொண்டியடித்துக் கொண்டிருக்கும் இத் தீவு ஒரு நிரந்தர சப்பாணியாய் மாறிவிடக்கூடும். இந் நிலமை தெற்கில் முழுமையாக விளங்கிக் கொள்ளப்பட்டுள்ளது என்றும் கூறிவிட முடியாது. அரச தரப்பு புலிகளுடன் செய்து கொண்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கை வெறும் ஒற்றைக்கால் முன்னெடுப்பே என்பதுடன் தமிழீழத்திற்கு மாற்றாக என்ன தீர்வு முன் வைக்கப்படவிருக்கிறது என்பதைப் பொறுத்தே ஒருபேச்சாயினும் ஓராயிரம் பேச்சாயினும் வெல்லுமா தோற்குமா என்பதை இப்போதைக்கு சொல்லி வைக்க முடியும். ஏனெனில் 'பலத்த இராணுவக் கட்டமைப்போடு ஒரு முழுமையான தேசமாக வளர்ந்துள்ள தமிழ் விடுதலையும் அதன் பிரதிநிதிகளான புலிகளும் தேசத்தை மறுதலிக்கும் எந்தவொரு அரைகுறைத் தீர்வையும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. பகுதிக் கூட்டாட்சி ( Semi Federation ), கூட்டாட்சி, ( Federation ), கூட்டிணைப்பாட்சி ( Confederation ) போன்ற மாதிரிகளைப் பின்பற்றிய தீர்வொன்றை ஏற்றுக் கொள்ளக் கூடிய சந்தர்ப்பங்களைக் கடந்து தமிழ்த் தேசிய விடுதலை அதனுடன் இணைந்த அரசியல் என்பன வளர்ச்சியுற்றுள்ளன. அத்துடன் தமிழ்த்தேசியம் தன்னைப் பாதுகாப்பதன் நிமித்தமே எப்போதும் போராடி வந்துள்ளதையும் அவதானிக்க முடிகிறது. ஆகவே வெறும் தலாவருமான ஐதாக்கத்திற்கான ஓர் அதிகாரப்பகிர்வு தமிழீழத்திற்கு மாற்றாக அமையும் என எதிர்பார்க்க முடியாது. சிலர் கருதுவது போல சுவிஸ் மாதிரியோ பிரித்தானிய மாதிரியோ கனேடிய மாதிரியோ இலங்கைக்கு பொருந்துமெனக் கருத முடியாது. தேசங்களை அங்கீகரித்த கூட்டிணைப் பாட்சியின் தூயமாதிரியாகக் கூறப்படும் அமெரிக்க அரசியல் மாதிரியில் 'வல்லரசு' என்ற கருத்தமைப்பிற்குப் பின்னால் அதிகாரங்கள் மையத்தை நோக்கி குவிந்து வருவதாகவும் இது ஒரு மறைமுகமான ஒற்றையாட்சிப் பண்பைக் கொண்டுள்ளதாகவும் அரசியல் அறிஞர் கிறிபித் (Griffith) குறிப்பிடுகிறார். ஆகவே அமெரிக்க மாதிரியும் இங்கு பொருந்தி வருமெனக் கூறமுடியாது. ஆகவே அதிகப்பட்ச ஜனநாயகப் பண்புகளையும் தேசங்களை முழுமையாக அங்கீகரித்த மக்களாட்சி முறைமையையும் கொண்ட Consociational Democracy என்றொரு அரசியல் மாதிரியை பல்லின, பன்மத பல்கலாசார, பன்மொழி கொண்ட ஒரு தேசத்திற்கு தற்கால அரசியல் விஞ்ஞானிகள் சிபார்சு செய்கின்றனர். இவ்வகை மாதிரியின் விளக்கவாளராக அரசியல் விஞ்ஞானி எரன்ட் லிஜ்பார்ட் (Arend Lijphart) திகழ்கின்றார். இவ்வமைப்பு முறை ஒஸ்ரியா, பெல்ஜியம், நெதர்லாந்து நாடுகளில் காணப்படுவதாகக் கூறப்படுகிறது. இவ்வாறான பல்லினப்பண்புள்ள நாடுகளில் நிலவும் தேசங்களின் இறைமையை அங்கீகரித்த அதிகபட்ச ஜனநாயகப் பண்புள்ள மக்களாட்சி முறையின் கலவையொன்று இலங்கையில் தீர்வாக முன்வைக்கப்பட்டால் அத்தீர்வை தமிழ் தேசமும் அதன் பிரதிநிதிகளான விடுதலைப் புலிகளும் ஏற்றுக்கொள்வார்கள் என்பது எனது ஊகம்.




இன்னும் பேசலாம்.....





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுவுடைமை

- இ.வே.ராமசாமி - (தந்தை பெரியார்)

பொதுவுடைமை என்பது பொது மனித தர்மமென்றும்: சகோதரத்தன்மையும் சமத்துவத்தன்மையும் கொண்டதென்றும் வேதாந்த தத்துவத்துக்கும் ஆத்திகத் தன்மைக்கும் ஏற்றது என்றும், மதத்தலைவர்களுக்கும், தேசியத்துக்கும், நீதிக்கும், பகுத்தறிவுக்கும் ஒத்ததென்றும்: அரசர்களுக்கும், செல்வவான்களுக்கும், பாதிரிப்புரோகிதக் கூட்டங்களுக்கும் நன்மை பயக்கக் கூடியதென்றும் பொதுவுடைமைத் தத்துவமேதான் மோட்ச நிலை என்பதும், முத்திநிலை என்பதுமாகும் என்றும் ஒருவாறுசுருக்கமாய் விளக்கிக் காட்டியிருக்கிறோம்.

குளிர் நாட்டு உடை எப்படி உஷ்ண நாட்டிற்குப் பயன்படாதோ அதேபோல், மேல் நாட்டுக்குப் பொருத்தமான பொருளாதார சமத்துவக் கொள்கை இந்நாட்டுக்கு இன்றைய நிலையில் பயன்படாது. நாமும் மேல் நாட்டினரைப் போல் பகுத்தறிவுள்ள மக்களாக ஆகிவிடுவோமேயானால், அப்புறம் கம்யூனிசம் நமக்கு முற்றிலும் பயன்படும். இதைக் கம்யூனிஸ்டுகள் உணர்ந்து மக்களுக்கு முதலில் அறிவு பெருகச் செய்ய வேண்டும்.

பணக்கார முதலாளி ஒழிவதற்கு முன்னால், புரோகிதப் பார்ப்பன முதலாளிகளும், கல் முதலாளிகளும், மட முதலாளிகளும் ஒழிய வேண்டும் என்பதை நம் கம்யூனிஸ்டுத் தோழர்கள் உணர்ந்து, முதலில் அவர்களை ஒழிப்பதில் கவனம் செலுத்த வேண்டும்.

தோழர்களே! கமயூனிஸ்டுகளின் இன்றைய கிளர்ச்சி நடைபெற்று வந்தாலும், நடைபெறாவிட்டாலும் இந்த நாட்டிற்கும் கம்யூனிசம் வரத்தான் செய்யும். ஏன்? கம்யூனிசம் ஒன்றுதான் உலக அமைதிக்கே, உலக மேம்பாடிற்கே உற்ற சாதனமாகும் என்ற அறிவு- அதுவே சத்தியமானது, அதுவே உண்மையானது என்ற அறிவு எல்லா நாடுகளிலும் கொழுந்துவிட்டெரிய ஆரம்பித்திருக்கிறது. அந்த சுவாலை இன்றில்லையானாலும் நாளை இந்நாட்டையும் கவ்வத்தான் போகிறது. ஆங்கிலேயரின் தந்திரமோ, அமெரிக்கரின் அணுகுண்டோ கம்யூனிசத்தின் பரவலை இனியும் தடை செய்து கொண்டிருக்க முடியாது.

கம்யூனிஸ்ட் கொள்கைகளுக்கும், திராவிடர் கழகக் கொள்கைகளுக்கும் அதிகமான பேதம் கிடையாது. அதாவது, இன்றையதினம் ஒரு தற்குறியை அழைத்து அவனிடம் கட்சிகளைப் பற்றிக் கேட்டால், அவன், 'கம்யூனிஸ்ட் கட்சி என்றால் பணக்காரர்களை ஒழிப்பது; நாட்டைத் தொழிலாளிகள் ஆதிக்கத்தில் ஆக்குவது, என்றும்; 'திராவிடர் கழகம் என்றால் பார்ப்பனீயத்தையும், பணக்காரனை- ஏழையை- பார்ப்பானை- பறையனை உண்டாக்கிய சாமியையும் ஒழிப்பதும் கோவில்களிலே அடைபட்டுக் கிடக்கும் குழவிக் கற்களை உடைத்து எறிந்து அதன் சொத்துக்களைக் கல்விக்கும் தொழிலுக்கும் ஆஸ்பத்திரிக்கும் உபயோகப்படுத்த வேண்டும்.என்றும் கூறுவது' என்றுந்தான் கூறுவான். அப்படியேதான் இன்றையதினம் பொதுமக்களும் கூட நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அகவே, கம்யூனிஸ்ட் கட்சி பணக்காரர்களை ஒழிப்பதில் முதல்படியில் நிற்கிறது. திராவிடர் கழகம் பார்ப்பனீயத்தை ஒழிப்பதில் முதல்படியில் நிற்கிறது. என்றாலும், பணக்காரர்களை ஒழிப்பதில் திராவிடர் கழகத்திற்குக் கவலை இல்லை என்று சொல்ல முடியாது. பணக்காரர்களை ஒழிக்க வேண்டியது அவசியம்தான். ஆனால், பார்ப்பனீயத்தை, மூடநம்பிக்கையை ஒழிக்க வேண்டியது மிகமிக அவசியம் என்று திராவிடர் கழகம் கருதுகின்றது.

பணக்காரத்தன்மைக்குப் பார்ப்பனீயமும், மேல்சாதி-கீழ்சாதித் தன்மையும், கடவுள் தன்மையும் தான் காரணம். இவற்றை ஒழிக்காமல் பணக்காரர்களை ஒழித்தால் மறுபடியும் பணக்காரர்கள் முளைத்துக் கொண்டே இருப்பார்கள். சாக்கடையையும், கொசுக்களையும் ஒழித்தால்தான் அழுக்குத் தண்ணீரையும் மலேரியாக் காய்ச்சலையும் ஒழிக்க முடியும். ஆகையால்தான், திராவிடர் கழகம், பணக்காரத்தன்மையை ஒழிக்க அஸ்திவார வேலை என்று கருதி, இதைச் செய்கின்றது.

பணக்காரத் தன்மைக்கு எளிதில் எதிர்ப்புக் கிடைக்கும். பார்ப்பனீயத்திற்கு எதிர்ப்புக் கிடையாது. இந்த நாட்டில் இது ஒரு பெரிய கஷ்டம். ஆதலால், முதலில் சுலபமானதைச் செய்து கொண்டு பிறகு கஷ்டமானதைச் செய்து கொள்ளலாம் என்று கருதுகிறார்கள்.

ஆகையால், நாம் இந்த கம்யூனிசத்தை ஏற்பதில் தவறு இல்லை. இதுதான் மக்களின் நல்வாழ்விற்கு வழி. என்றைக்காவது உலகம் அங்கு சென்றுதான் நிற்கும், அதுவும் சீக்கிரம் சென்று நிற்கும்.

இந்த நிலையில் உண்மையான சமதர்மவாதிகள், சமதர்மத்தில் நம்பிக்கையும் அக்கறையும் கொண்டவர்கள் இருப்பார்களேயானால், அவர்கள் சமதர்மம் என்கிறதை மாற்றிக் கொண்டு, பொது உடைமைத் தத்துவத்தை இலட்சியமாகக் கொண்டு முயற்சித்தால் பயன் ஏற்படலாம் என்று கருதுகின்றேன். 'பொதுஉடைமை' என்பது பகுத்தறிவின் எல்லையாகும்.


அது (பொது உடைமைக் கொள்கை) நல்ல பலாத்காரத்திற்கும் வலிமைபெற்ற பலாத்காரத் திற்கும் ஆக்கமும் ஊக்கமும் கொடுக்கக் கூடியது என்பதோடு, எந்தச் சுயநல, பகுத்தறிவுவாதியாலும் எளிதில் சமாளிக்க முடியாததுமான வலுவுடையதாக இருக்கும்.

பகுத்தறிவை அடிப்படையாய் வைத்து இந்தியப் பகுத்தறிவுவாதிகள் பொது உடைமைவாதிகள் ஸ்தாபனம் என்னும் பெயரால் ஒரு ஸ்தாபனம் துவக்கி, அங்கத்தினர்களுக்குக் கண்டிப்பான பரீட்சைக்குள்ளாகும் படியான தகுதி ஏற்படுத்தி, பிரச்சாரம் துவக்கினால் தேர்தலுக்குள் பொது உடைமைக் கொள்கைக்கு அனுகூலமான ஒரு நிலைமை அடையலாம் என்றே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைக்கிறேன். சமதர்மம் பேசுகிறோம். எப்படிப்பட்ட சமதர்மம் ஏற்பட்டாலும் நம் சமுதாயமும் நாடும் பொது உடைமைச் சமுதாயமாகவும், பொது உடைமை நாடாகவும் ஆகும் வரையில் ஏழை பணக்காரர் இருந்துதான் தீருவார்கள். மற்றும் முதலாளி - தொழிலாளி இருந்துதான் தீருவார்கள். எஜமான் - வேலைக்காரர்கள் இருந்துதான் தீருவார்கள். இந்த நிலை இருக்குமானால், இருக்கும் வரை - ஒரு கட்டுத்திட்டம், ஒழுங்கு முறை இருந்தால்தானே மனித வாழ்வும் காரிய நடப்பும் சரிவர நடந்தேற முடியும்? மனிதனுக்கு இன்று சொத்துரிமை இருக்கிறது. இதில் மற்றவன் தனது பலாத்காரத்தைப் பயன்படுத்தி உரிமை பெறுவதென்றால் - கையில் வலுத்தவன் பயனடைவது என்றால் மனித சமுதாயத்தில் அமைதியும் சமாதானமும் ஆன வாழ்வு எப்படி இருக்க முடியும்?



ஆகவே, நமது ‘அரசியல் வாழ்வு’ என்பதைப் பொது உடைமை வாழ்வாக ஆக்கிக் கொண்டால்தான் மக்கள் சமுதாயம் கவலையற்று சாந்தியும் சமாதானமும் பெற்று வாழ முடியும். இல்லாவிட்டால், மக்கள் சித்திரவதைக்கு ஆளாகத்தான் நேரிடும்.

கம்யூனிசம் என்பதற்குத் தமிழிலே பொதுவுடைமை என்பார்கள். இன்றைய தினம் உடைமை என்று கருதப்படுவதெல்லாம் தனித்தனி மனிதனுக்குச் சொந்தம். பொதுவுடைமை என்றால் எந்தச் சொத்தும் எந்த மனிதனுக்கும் சொந்தமல்ல. பொதுவுடைமை நாட்டில் அந்த நாட்டுச் சொத் துக்கள் எல்லாம் சர்க்காருக்கு (பொது மக்களுக்கு)ச் சொந்தம். நிலமாக இருந்தால் எல்லா மக்களும் பாடுபட்டுப் பயிர் செய்வது. தொழிற்சாலையாக இருந்தால் எல்லோரும் தொழில் பண்ணுவது பாடுபட்டு வரும் பொருளை எல்லோரும் அனுபவிப்பது. எப்படிக் குடும்பத்தின் சொத்தானது குடும்பத்திலுள்ள அத்தனை பேருக்கும் பொதுவானதாகின்றதோ, குடும்பத்தின் எல்லா மக்களும் எப்படிப் பாடுபட்டு உழைக்கின்றார்களோ, பிறகு வரும் வருவாயைக் குடும்பத்திலுள்ள எல்லோரும் எப்படி அனுபவிக்கின்றார்களோ, அதுபோலத்தான், பொதுவுடைமை நாடு என்பதும். நாட்டு மக்கள் எல்லாம் ஒரு குடும்பம்போல். எல்லா மக்களும் பாடுபட வேண்டும். வருகின்ற இலாபம் விளைபொருள் முதலியவற்றை எல்லா மக்களுக்கும் பகிர்ந்தளிப்பது. இதுதான் பொதுவுடைமையாகும்.

பொதுவுடைமை என்று கூறுவதன் அடிப்படைத் தத்துவமே, மனிதன் கவலையற்ற வாழ்வு வாழ வேண்டும் என்பதுதான். சொந்த உடைமை என்பது கவலை நிறைந்த வாழ்வாகும்.

மனிதனுக்கு உணவுப் பண்டம் பற்றவில்லையானாலும், சற்றுக் குறைவாக இருப்பதனாலேயே குறை கூறமாட்டான். ஒருவனுக்கு அதிகம்; இன்னொருவனுக்குச் சும்மா ஒன்றுமில்லை என்றிருந்தால்தானே குறைபாட்டுக்கு எதிர்ப்பதற்கு இடமேற்படும்!

மனிதனுடைய கவலைக்கும் குறைபாட்டிற்கும் பரிகாரமாக, முடிந்த முடிவாக அறிஞர்களால் பலகாலம் சிந்திக்கப்பட்டு ஏற்படுத்தப்பட்டதுதான் பொதுவுடைமைத் தத்துவம்.

தோழர்களே! பொதுவுடைமை நாட்டில் கடவுளோ, மதமோ, சாஸ்திர நம்பிக்கையோ இல்லை. அங்கு உயர்ந்தவன், தாழ்ந்தவன் உயர்ந்த உத்தியோகத்தன், தாழ்ந்த உத்தியோகத்தன் என்கின்ற நிலையுமில்லை. எல்லோரும் சமமானவர்கள்: எல்லோருக்கும் சம்பளம் (வாழ்க்கை வசதி) ஒன்றுதான் - வேலைதான் வேறு, வேறு. அங்கு பெரிய வேலையை ஒத்து கொண்டால் பொறுப்புக்கள் அதிகம் என்று கருதுவான்.

மேல் நாட்டில் சாதி இல்லாததால், அங்கு பொதுவுடைமைக்கு முதலில் வகுப்புச்சண்டை துவக்க வேண்டியதாயிற்று. இங்கு சாதி இருப்பதால் பொதுவுடைமைக்கு முதலில் சாதிச் சண்டை துவக்க வேண்டியதாகும்.


# விளையும்பயிரே !

-எம்.வை.ராஜ்கபூர்-

விளையும் பயிரை
களையென நினைத்து
தளையிடும் மாந்தர்தம்
நிலையினை எண்ணி
பிழைகளை நீக்கி
அழைத்திடும் நீதி

விளக்கினைச் சுற்றும்
விட்டில் பூச்சியிலும்
விஞ்ஞானம் உண்டென
பாரிஸ் கம்யூனை
பரிசாக்கி மீட்டவர்
பெரிய விஞ்ஞானி

ஞானம் பெரிதென
ஞாலம் அறிந்திடும்
ஞானிகள் உள்ளனர்
ஞாபகம் கொள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுதிப்பார்

(வளரும் படைப்பாளிகளுக்கான பக்கம்)

இந்தப்பகுதி வளரும் படைப்பாளிகளுக்கானது. அனுப்பப்படும் எல்லா ஆக்கங்களும் முடிந்தவரை இங்கு வெளியிடப்படும். இது உங்கள் பயிற்சிக் கொப்பி மாதிரி. பயமில்லாமல் எழுதுங்கள். வசதிப்பட்டால் உங்களை மெருகூட்டுவதற்கான குறிப்புக்களையும் வழிகாட்டல்களையும் விளக்கு உங்களுக்கு வழங்கும்.

## இப்பொழுது புரிகிறது

என் இனியவனே...
கடற்கரையில் நாம்
கை கோர்த்து நடந்தபோதும்..
புல் தரையில் அமர்ந்து
சில்மிசங்கள் செய்தபோதும்..
மடி மீது நீ சாய்ந்து
காதல் கவிதை படித்த போதும்
கைவிடமாட்டேன் என்று
சத்தியங்கள் செய்தபோதும்
சமயம் பார்த்து என்னை - நீ
கட்டியணைத்த போதும்...
அன்பு முத்தங்கள்
பரிமாறிக் கொண்ட போதும்..
பெற்றோர்கள் ஆசீர்வதிக்க - எம்
திருமணம் நடந்த போதும்
பஞ்சணை சுகம் பகிர்ந்துகொண்டு
சொர்க்கத்தில் மிதந்த போதும்...
எத்தனை உவமைகளுடன்
"உயிருக்கு உயிரானவளே"
என்று என்னை வர்ணித்தாயே...
நினைவிருக்கிறதா காதலா?...

ஆசைக் கடலில் தோன்றும் - மோக
அலைகளுக்கிடையில்
அல்லாடிய எனக்கு - அப்போது
அதன் அர்த்தம் புரியவில்லை....
உன் உயிரை என்
உடலில் சுமக்கப் போகிறேன்
என்பதை ஏற்கனவே - நீ
திட்டமிட்டுவிட்டாய், என்பது
இப்பொழுதுதான் எனக்கு புரிகிறது...
ஆம் இன்னும்
அரை ஆண்டில் - நான்
ஒரு குழந்தைக்கு தாய்...

-திருமலை வாசன்-

## விதவையின் வினா

உயிரோடு நடமாடிய போது
ஓர் . . . . .
மலரைக் கூட அணிய
தடைவிதித்தவர்களே!
பிணமெனத் தெரிந்தும்
ஆயிரம் மலர்களால்
அஞ்சலித்து
சாதித்தது தான் என்ன?

மா.அமுதசுரபி
திருக்கோணமலை.

## மாறுதல்

நான்... நீ...
எனதுனது உறவு.
இயற்கை,
ஐந்தறிவு ஜீவிகள்,
இவர்களெல்லாம்
அங்கீகரித்தபோது
அவைகளுக்கு
ஆறாவதறிவும்
எதற்கு?

-மிதுஷா-



ஆக்கங்களை அனுப்புபவர்கள் தயவு செய்து உங்கள் முகவரியையும், சொந்தப் பெயரையும் குறிப்பிடவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டைப்படக்கட்டுரை

# காக்கா

(தொகுப்பு - மயிலோன்)

சுவாசித்துக் கொண்டிருக்கிறோம் என்பது எப்போதாவதுதான் நினைவுக்கு வருகிறது. கடிகாரம் ஓடிக்கொண்டிருக்கிறது என்பதும் எமக்கு எப்போதாவதுதான் நினைவிற்கு வருகிறது. பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் காக்கைகளும் எமக்கு அப்படித்தான்.

காகங்கள் நம் கண்முன்னே கொஞ்சம் கொஞ்சமாக அருகிக் கொண்டுவரும் பறவை. என்றோ ஒருநாள் இந்த 'கா.....கா.....' ஓசை கேட்காமலே போய்விடவும் கூடும்.

காகங்களில் இரண்டு வகை உண்டு

1. நாட்டுக்காகம்
(Corvus Macrorhyncos culminatus sykes)
★ கரியநிறம் கொண்டவை.
★ கழுத்துப் பகுதியும் கருமையாகவே இருக்கும்.
★ தடித்த கரிய அலகினைக் கொண்டிருக்கும்.
★ காடுகளில் இவையே அதிகமாக இருக்கும்.
★ தம் வாழ்க்கைக்காக மனிதனில் அதிகளவில் தங்கியிருப்பதில்லை.

2. வீட்டுக்காகம்
(Corvus Macrorhyncos culminatus sykes)
★ மெல்லிய அலகுகளை கொண்டிருக்கும்.
★ கழுத்துப் பகுதி சாம்பல் நிற இறகுகளாலானது.
★ மனிதனில் அதிகமாக தங்கி வாழும்.

இனப்பெருக்க கூடலின்போது ஆண் காக்கைகள் பெண் காக்கைகளை கவர்வதற்கென பல சிறப்பான நடத்தைக் கோலங்களை காட்டுகின்றன.


♥ தலையிலிருக்கும் அடர்த்தியான இறகுகளை சிலிர்த்துக் கொண்டைபோல் ஆக்கிக் கொள்கின்றன.

♥ பாதி திறந்த சிறகுகளை பின்புறத்திற்கு மேலாக உயர்த்திப் பிடித்துக் கொண்டு மெல்லிய நடுக்கத்தைக் காட்டுகின்றன.

♥ கடுரமான உச்சஸ்தாயியிலும், மேலும் பல விதங்களிலும் ஒலியை எழுப்புகின்றன.

காகம் ஒரு புத்திசாலிப் பறவை. இவற்றை மிக இலகுவாக பயிற்றுவிக்க முடியும். காகங்களை பழக்கி இலகுவாக சமூகவிரோத செயல்களில் ஈடுபடுத்த முடியும் என்பதால் இவற்றை செல்லப்பிராணியாக தனிப்பட்டவர்கள் வைத்திருப்பது இலங்கையில் சட்டவிரோதமாகும்.

ஆண் காக்கைகள் நல்ல கணவனாகவும், நல்ல தகப்பனாகவும் இருக்கின்றன. அவை தமது குடும்பத்தையும், துணைப்பெண்ணையும் மிக நன்றாக கவனித்துக் கொள்வதோடு கூடு கட்டலிலும் பங்கெடுக்கின்றன. மனிதனிடமிருந்து தன்கூட்டினை பாதுகாக்கவென இவை அதீத முயற்சிகள் எதனையும் மேற்கொள்வதில்லை.





யூன் 05
உலகசுற்றாடல் தினம்

காக்கைகள் அனைத்துமுண்ணிகள். அழுகிய மாமிசம், விலங்குகள், பறவைகள், பிட்டு, சோறு என்று எதையுமே உணவாக்கக் கூடியவை. இதனால்தான் காகங்கள் மிகச்சிறந்த சுத்திகரிப்பாளராக காணப்படுகின்றன.

இறப்பு நிகழும்போது அதனை காகங்கள் ஒரு சடங்காக மேற்கொள்கின்றன. இறந்த உடலை சுற்றி ஏராளமான காகங்கள் சூழ்ந்து கொண்டு அந்த இறப்புச் சடங்கினை அனுஷ்டிக் கின்றன.

காகங்கள் பெரும்பாலும் ஏப்ரல் - செப்டெம்பர் வரையான காலப்பகுதியில் முட்டையிடுகின்றன. நாட்டுக்காகங்கள் ஜூலை மாதத்தை அதிகமாக விரும்புகின்றன. வீட்டுக்காகங்கள் மே - ஓகஸ்ட் அல்லது செப்டெம்பர் மாதங்களை விரும்புகின்றன. இம்மாதங்களிலேயே இவை பளபளப்பான கருமை நிறத்தை பெற்றுக்கொள்வதோடு பொலிவான உருவத்தையும் கொண்டிருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பார்வையாளன்-பங்காளி

-சந்த்ரராம்-

"சித்தர்களுக்கு 'தாவோ'வின் வேர் தெரியும், கிளைகள் புரியாது. விஞ்ஞானிகளுக்கோ அதன் கிளைகள் புரியும் வேரைத் தெரியாது. விஞ்ஞானத்திற்கு வேதாந்தம் தேவையில்லை. வேதாந்தத்திற்கு விஞ்ஞானம் தேவையில்லை. ஆனால் மனிதனுக்கு இரண்டும் தேவை." என்று கூறுகிறார் *பிரிட்கோவ் காப்ரா* ***(FRITJOF CAPRA).*** இவர் நவீன விஞ்ஞானத்தைப் பொதுமக்களுக்கு விளங்கக்கூடியவாறு எழுதிவரும் எழுத்தாளர்.

இவரது "பௌதீகத்தின் தாவோ" என்பதுதான் புதிய விஞ்ஞானத்தைப்பற்றிய முதல் விளக்கப் புத்தகம் என்று கூறலாம்.

கீழைத்தேய சித்தர்களின் உலகத் தரிசனத்திற்கும், விஞ்ஞானத்தின் புதிய கண்டு பிடிப்புக்களுக்கும் உள்ள ஒற்றுமையை மையமாக வைத்து எழுதப்பட்ட இந்நூலில் ஒரு பகுதியைக் கருவாகக் கொண்டே இக்கட்டுரை வரையப்பட்டுள்ளது.

"பார்வையாளன் வேண்டாம்! பங்காளிதான் வேண்டும்!" என்பது இன்று பரவலாகக் கேட்கப்படும் சுலோகம்.

நவீன பௌதீகத்திலும் இந்த பார்வையாளன்-பங்காளி பிரச்சனை இருக்கிறது. விஞ்ஞானத்தின் அடிப்படையான பரிசோதனைகளில், பரிசோதிக்கப்படும் பொருளும் பரிசோதிக்கும் விஞ்ஞானியும் வேறுவேறாக, ஒன்றுடன் ஒன்று தொடர்பற்ற தனித்தனி கூறுகளாக கருதப்பட்டு வந்தது.

ஆனால் பரிசோதிக்கப்படும் பொருள், பரிசோதனை முறைகளாலும், பரிசோதிப்பவனாலும், அவனது செய்கையாலும் பாதிப்படைகிறது. இது பரிசோதனை முடிவுகளிலும் தாக்கம் செலுத்துகின்றது. இந்த நிலை அணுத்துகள் பகுதிகளை ஆராயும்போது ஏற்படுகின்றது. (பொதுவாக எல்லா நிகழ்வுகளிலுமே இது ஏற்படுவதுண்டு.)

பௌதீக விஞ்ஞானத்தின் அடிப்படைத் தத்துவங்களை விளக்குமுகமாக ஐசாக் நியூட்டன் கொண்டுவந்த கோட்பாடுகள் மிகப்பெரிய அளவிலான அண்டங்கள், நட்சத்திரங்களின் அசைவுகளுக்கு ஈடுகொடுக்கவில்லை. அதனை விளக்குவதற்கு போதவில்லை.


ஐன்ஸ்டினின் விசேட சார்புநிலைக் கொள்கை, சார்புநிலைக் கொள்கை என்பன இவ்வசைவுகளுக்கு ஈடுகொடுத்தன. அத்தகைய அசைவுகளை விளக்கின. அதேபோன்று அணுக்களின் கட்டுக்கோப்பு, அசைவு பற்றிய புதிய தகவல்கள் வரத்தொடங்கிய காலத்தில் நியூட்டனின் மரபுவழிப் பௌதீகத்தால் அவற்றை விளங்கப்படுத்த முடியாமல் போய்விட்டது.

1920 களில் அணுபற்றிய ஆராய்ச்சிகளில் ஈடுபட்டிருந்த விஞ்ஞானிகளான **நீல்ஸ்போர், ஹைசன் பேர்க்**, போன்றோர் அணுவின் மாதிரியை புதிய தகவல்களுக்கேற்ப உண்டாக்கினர். **கோபன் ஹேகன்** மாதிரி (Copenhagen Model) என்று அழைக்கப்படும் விளக்கமே இன்று பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். இவ்விளக்கத்தின் முதற்படியே முன்னர் குறிப்பிடப்பட்ட **'பார்வையாளன்-பங்காளி'** விவகாரம். **கோபன் ஹேகன்** விளக்கத்தின் ஆரம்பப்படி பௌதீக உலகத்தை ஆய்வுப் பொருளாகவும், ஆய்வாளராகவும் தனித்தனிக் கூறுகளாக பிரித்தலே.

ஆய்வுப் பொருளானது அணுவாகவோ, அணுத்துகள்களாகவோ அல்லது அணு நிகழ்வாகவோ இருக்கலாம். ஆய்வாளர், ஆய்வுக் கருவிகளுடன் ஒருவராகவோ பலராகவோ இருக்கலாம். ஆய்வாளர் பற்றிய விபரிப்பு மரபுவழிப் பௌதீக மொழியில் கூறப்படுகிறது. ஆனால் அணு, அணு நிகழ்வுகள் பற்றிய தகவல்களை மரபுவழிச் சொற்களால் சரியாக விளக்கமுடியாத நிலை ஏற்படுகிறது. இருந்தும் இதுதவிர வேறுவழி இல்லாத படியால் இதையே செய்திருக்கிறார்கள். குவாண்டம் கொள்கைப்படி அணு நிகழ்வுகள் இப்படித்தான் இருக்கும் என்று திட்டவட்டமாக கூறமுடியாது. 'சரியாக', 'அநேகமாக' எனும் அடைமொழிகளுடன் தான் எதையும் கூறவேண்டிய நிலை.

ஒரு இலத்திரன், எந்தப் பகுதியில் எப்போது இருக்கும் என்பதை திட்டவட்டமாகக் கூறமுடியாது. ஒரு பிரதேசத்தை அடையாளமிட்டு, இந்த பிரதேசத்தில் உள்ள ஏதாவது ஒரு புள்ளியில் இருக்கும் என்று கூறமுடியும்.

கீழே காணப்படும் படம், வெவ்வேறு சந்தர்ப்பங்களில் இலத்திரன் இருக்கக்கூடிய பிரதேசங்களைக் காட்டுகின்றது.



**வெளிறலான பகுதிகளில் இலத்திரன் காணப்படலாம். கருமையான பகுதிகளில் காணப்படுவதில்லை.**


இலத்திரனின் பல்வேறு நிலைகளைப் பற்றிய தகவல் கணித முறையில் கூறப்படுகின்றது. இதனால் பரிசோதனையின் ஆரம்பக்கட்டம் சாதாரண மரபுக்கலைச் சொற்கள் மூலம் வெளியிடப் படுகின்றது. பரிசோதனையின் முடிவுகளான இலத்திரனின் நிலை பற்றிய தகவல்கள் குவாண்டம் பௌதீகத்தின் விசேட பரிபாஷையில் கூறப்படுகின்றது.

இலத்திரன் பற்றிய தகவல்கள் அறிய, முதலில் அதனைப் பிரித்தெடுக்க வேண்டும் அல்லது உருவாக்கவேண்டும். இதனை **ஆயத்தநிலை** எனக் கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வுக்கு இலத்திரனைத் தயாரித்த பின்னர் அதன் குணங்களை அளவிட ஆரம்பிக்கலாம். இதனை **அளவிடும் நிலை** எனக்கூறலாம். ஆயத்தநிலை நடைபெறும் இடத்திற்கும், அளவிடல் நிகழும் இடத்திற்கும் இடையே பெரும் இடைவெளி இருந்தால்தான் அளவிடல் வெற்றிகரமாக நிகழும்.




உண்மையில் இந்த இடைவெளி முடிவிலித்தூரமாக இருத்தல் வேண்டும். இந்த இடைவெளிக்கு இடையில் அமையும் பொருளாக இந்த இலத்திரன் இருக்கிறது. மேற்கண்ட இரு நிலைகளையும் ஒன்று கூட்டும் பாலமாக இந்த இலத்திரன் அர்த்தமுள்ள பொருளாகிறது.

இந்த இடைவெளி எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாகிறதோ அவ்வளவுக்கவ்வளவு அளவிடல் துல்லியமாக இருக்கும். ஆனால் இது நடைமுறையில் சாத்தியமில்லை. இப்போது இது தேவையுமில்லை என விஞ்ஞானிகள் நம்புகின்றார்கள்.

பொருளை மேலும் மேலும் பிரித்துக் கொண்டே சென்றால் அது துகள்களாலானது எனத் தோன்றும். ஆனால் உண்மையில் அத்துகள்கள் அப்பொருளைக் கட்டியெழுப்பும் அடிப்படைக்கற்கள் அல்ல. அதாவது துகள்கள், பொருட்களின் அடிப்படைக்கூறுகள் அல்ல. அவை ஒரு தோற்றமே. பொருட்கள், குணத்தினாலும் அவை ஏனைய தொகுதிகளில் ஏற்படுத்தும் தாக்கத்தினாலுமே அனுமானிக்கப்படுகின்றன என்கிறார் **நீல்ஸ்போர்**.

"அடிப்படைக்கற்கள் அல்லது அடிப்படைத் துணிக்கைகள் என்று எதுவுமில்லாமல், ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய ஒரு பரிபூரணத்துவம் தான் இந்த அண்டம்" என்கிறது புதிய குவாண்டம் கொள்கை.

ஆய்வுக்குரிய பொருளும், ஆய்வாளனும் ஒரு பரிபூரணத்துவத்தின் வெவ்வேறு வடிவங்களாக, பகுதிகளாக இருக்கும்போது ஆய்வு எப்படி நிகழும்? பார்வையாளனே பங்காளியானபின் காணும் பொருள், காண்பவன், காட்சி, எல்லாம் ஒன்றிணைந்த ஒரே நிகழ்வாக மாறிவிடுகிறது.

# கொலையனின் கூத்து

*-கிறிஸ்ரின்-*

*கொலையன் கூத்தாடினான்.*

*ஒரு குரங்குக் குட்டியாய்க்*
*களம்புகுந்த கொலையனின் கைகளில்*
*குறுங்கணத்தில் தோன்றியது*
*கொடுவாள்*


*இனியும் இவனுள் குடியிருக்க விருப்பமின்றி*
*பறந்து போயிற்று பரிசுத்தம்*
*முன்னோனின் பட்டோலைப்பட்டியல்களில்*
*பெயர்கள் மாறின*
*மருந்தின் பெயரில் விஷங்கள்*


*பின்-*
*கிழிந்து தொங்கிய ஆகாயத்திலிருந்து*
*கரிந்து சாம்பலாய்த்தூர்ந்தன*
*முகில்கள்*
*நட்சத்திரங்கள் நொருக்கப்பட்டன*
*சூரியன் ஒரு கூழ்முட்டையாய்க்*
*கசியத்தொடங்கியது*

*கொலையனின்*
*ரணந்தின்னும் வேட்கையில்*
*இலைகள் உதிர்ந்து*
*கிளைகள் முறிந்து*
*வேர்கள் பெயர்ந்து*
*சரிந்தன மரங்கள்*
*அழிந்தன வனங்கள்*

*கொல்லும் பண்பாடு சொல்லிக்*
*கொலையன் கூத்தாடினான்*
*உச்சக்கூத்தில்*
*சுழன்ற கொடுவாளில்*
*திண்மையுற்ற காற்றுக் கிழிபட*
*"மனிதா" என்ற கூக்குரலுடன்*
*குப்புறவிழுந்து உடைந்து சிதறியது*
*கொலையனால் வெட்டுண்ட*
*இயற்கையின் சிலை.*

*கொலையன் கூத்தாடினான்.*






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோழன் எழுதுவது

அன்புள்ள தோழிக்கு,
நீ விடுதியில் தங்கியிருந்து படிப்பதாக முடிவெடுத்திருப்பது எனக்கு சிறிய வருத்தம் தான். இங்கேயிருந்து தான் என்ன பிரயோசனம் கிடைத்துவிடப்போகிறது?

வீதியில் எதிரெதிராக சந்தித்துக்கொண்டால் இரண்டு செக்கன்கள் புன்னகைக்கலாம். ஆள் நடமாட்டம் இல்லாத இடமாக இருந்தால் இரண்டொரு வார்த்தைகள் பயந்து பயந்து பேசிக்கொள்ளலாம். (நம் உள்ளூர் காதலர்கள் போல.) இந்நிலையில் நாம் நட்பைக் கூட வளர்க்கமுடியாது. பயனுள்ள நட்பை எப்படி வளர்ப்பது?

தற்போது நீ விடுதியில் இருப்பதால் எமக்கிடையேயான கடிதப்போக்குவரத்திற்கு வழி திறந்திருக்கின்றது. இனி நாம் பல விடயங்கள் பற்றிய எமது கருத்துக்களைப் பறிமாறிக் கொள்ளலாம். நண்பர்கள் ஆக முயற்சி செய்யலாம்.

ஆண்-பெண் நட்புக்கூட சாத்தியமில்லாத சமூகத்தில் காதல் எப்படி சாத்தியமாகும்? காதல் சாத்தியமில்லாத போது திருமணம் எப்படி அர்த்தமுள்ளதாக இருக்கமுடியும்? திருமணமே அர்த்தமற்றதாக இருக்கும்போது குடும்பம், உறவு, சமூக ஒழுக்கம் என்பவையெல்லாம் எப்படி பிரயோசனமாக இருக்கமுடியும்? மொத்தத்தில் கலாச்சாரம்.... கலாச்சாரம்..... என்று நாம் சொல்லிக்கொண்டு இருப்பதெல்லாம் எவ்வளவு பெரிய பகிடி?

திருமணம் அர்த்தமற்றதா? என்று நீ கேட்கலாம். அது அர்த்தமற்றது மட்டுமல்ல, அபத்தம், பெரிய அநியாயம். அதிலும் 'காதல் திருமணம்' பெரிய மோசடி. 'நிச்சயிக்கப்பட்ட திருமணம்' அதைவிடப்பெரிய அடாவடித்தனம்.

உதாரணத்திற்கு உன்னிடம் ஒரு கேள்வி கேட்கிறேன்.

நீ இதற்கு முன் அதிகம் பேசிப் பழகியிராத ஒரு நூறு பேரைக் கொண்டு வந்து, இவர்களில் ஒருத்தியை நீ திருமணம் செய்யவேண்டும்.ஆனால் யாருடனும் அதிகம் பேசவோ பழகவோ கூடாது, அப்படித் தெரிவுசெய்யும் ஒருத்தியைத்தான் நீ காலம் பூராகவும் நண்பியாக வைத்திருக்கவேண்டும். பின்பு அவளைத் தவிர வேறு யாரையும் நண்பியாக்கக்கூடாது. வேறு யாருடனும் பேசவும் கூடாது என்று சொன்னால் நீ என்ன செய்வாய்?

நூறு பேரையும் ஒரு பார்வை பார்த்துவிட்டு உனக்குப் பிடித்த உருவம் கொண்ட ஒரு பெண்ணை தெரிவு செய்வாய், அப்படி உருவாகும் நட்பு வாழ்நாள் முழுவதும் தொடராது. இது 'காதல் திருமணம்'.

உன்னிடம் ஒருத்தியை அழைத்து வந்து காட்டிவிட்டு இவள் நல்ல பெண், நல்ல சொத்து உண்டு. நல்ல குடும்பம், இவளைத்தான் நண்பியாக்க வேண்டும். வேறு யாரையும் ஏறெடுத்துப் பார்க்கக்கூடாது என்று உன் பெற்றோர் சொல்கிறார்கள், இந்த நட்பு நிலைக்குமா?
இது 'நிச்சயிக்கப்பட்ட திருமணம்'.

இந்த இரு உதாரணங்களும் எவ்வளவு பெரிய அநியாயமாகவும், பித்தலாட்டமாகவும் தெரிகிறது? அப்படியிருக்க இந்த திருமணம் மட்டும் எப்படி நியாயமாகவும், புனிதமாகவும் இருக்கிறது? அடிமுட்டாள் கூட ஏற்றுக்கொள்ளாத இந்த கதைகளைத்தான் அத்தனை பேரும் கடவுளின் பரிசாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஒரு நண்பியைக் கண்டுபிடிப்பதே பெரும்பாடாக இருக்கிறது. இருக்க, காலம் பூராகவும் கட்டியழப்போகும் வாழ்க்கைத் துணையைக் கண்டுபிடிப்பதற்கு எவ்வளவு பெரிய தெரிவு தேவைப்படும்? இந்த தெரிவு இங்கே சாத்தியம்தானா?

ஓரக் கண்ணால் பார்ப்பதன் மூலமும், ஓரிரு வார்த்தைகள் பேசுவதன் மூலமும், வேறு ஒருவரிடம் விசாரிப்பதன் மூலமும் எந்தப் பொருளையாவது தெரிவு செய்யமுடியுமா? அப்படித் தெரிவு செய்யும் பொருளோடு எவ்வளவு காலத்தை நாம் கழிக்கமுடியும்?
இந்த அபத்தமான தெரிவில் கண்டெடுக்கும் தெரிவில்தான் திருமணம் செய்து காலம் முழுவதும் கட்டி அழுகிறார்கள்.
ஏதோ ஒருசில திருமணங்கள் நிகழ்தகவுப்படி வெற்றிகரமாக அமையலாம். அதனைக் காட்டிக்காட்டியே இந்த திருமணங்களை நியாயப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள்.

## பார்வையில் பட்டவை

**ஞானம்**
(கலைஇலக்கிய சஞ்சிகை)
மே 2002
ஆசிரியர் :தி.ஞானசேகரன்
தொடர்புகளுக்கு:
19/7,பேராதனை வீதி,
கண்டி.
விலை : 15/=

**மாணவர் ஒளி**
(மாணவர்களுக்கான கல்விச்சஞ்சிகை)
மே 2002
ஆசிரியர் :பொ.தவசிதன்
தொடர்புகளுக்கு:
19/2,விகாரை வீதி,
திருக்கோணமலை.
விலை : 20/=

**பார்**
(பொது அறிவு தொகுப்பு இதழ்)
யூன் 2002
ஆசிரியர் :வைகறை
தொடர்புகளுக்கு:
155,கடற்படைத்தள வீதி,
திருக்கோணமலை.
விலை : 5/=

**மாலையில் ஓர் உதயம்**
(நாவல்)
ஆசிரியர் : ஆனந்தா ஏ.ஜீ.இராஜேந்திரம்
வெளியீடு :
ஈழத்து இலக்கியச்சோலை,
21,ஔவையார் வீதி,
திருக்கோணமலை.
விலை : 175/=

**கதிரவன்**
(நாளிதழ்)
தொடர்புகளுக்கு:
171, மூர் வீதி,
திருக்கோணமலை.
விலை : 5/=

இவ்விதழ் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வளவு போலியான திருமணம் எப்படி இவ்வளவு காலமும் நிலைத்திருக்கின்றதென்று நீ கேட்கக்கூடும். திருமணம் மிகப்பழைய விஷயம் அல்ல. மனித வரலாற்றில் மிக அண்மைக் காலத்தில் புகுத்தப்பட்ட சடங்குதான் திருமணம். பண்டைய மனிதர்கள் திருமணம் செய்துகொண்டது கிடையாது.

இந்த திருமணத்திற்குப் பின்னால் மிகப்பெரிய பயங்கர நிறுவனமே இருக்கிறது. ஒரு பெரிய வில்லன் கூட்டம் இந்த திருமணத்தைப் பாதுகாத்து வைத்துக்கொண்டிருக்கிறது.

சாதி, மதம் போன்றவற்றை காப்பாற்ற நினைக்கும் கள்ளர்கள், தம் குடும்பச் சொத்து வேறு யாருக்கும் போய்ச் சேர்ந்துவிடக்கூடாது என்று நினைக்கும் சுயநலவாதிகள், சொத்துள்ள குடும்பத்தோடு தம் குடும்பத்தை இணைக்க நினைக்கும் பேராசைக்காரர்கள், திருமணம், குடும்பம் என்பவற்றின் மூலம் இலாபம் சம்பாதிக்கும் முதலைகள் கூட்டம் என்பவர்கள்தான் இந்த வில்லன்கள். இவர்கள் திருமணத்தை இலேசில் அழிய விடமாட்டார்கள்.

இந்த திருமணம் போலியானதென்று பலபேருக்குத் தெரியும். ஆனால் அவர்களும் திருமணம் செய்து கொள்கிறார்கள். ஏன்?

அதற்காகத்தான் இந்த மோசடிக்கும்பல் பெரிய சதிவலையே பின்னியிருக்கிறது.
உயிரினங்களின் அடிப்படையான தேவைகள் என்ன? உணவு, இனப்பெருக்கம். மனிதனும் ஒரு உயிரினம். அவனுக்கும் அப்படித்தான். இது இயற்கை.

ஒருவரை தொடர்ந்து பட்டினி போட்டுவிட்டு பின்னர் கொஞ்சம் உணவைக் காட்டி அவரை எப்படி வேண்டுமானாலும் ஆட்டுவிக்கலாம். இதே கேவலமான உத்திதான் திருமணம் என்று சொல்லப்படுகிறது.

பெண் அச்சம், மடம், நாணம், கற்பு என்பவற்றோடு இருக்க வேண்டும், அதிகம் வெளியில் திரியக்கூடாது, ஆண்களோடு அதிகம் பழகக்கூடாது. இதுதான் கலாச்சாரம், ஒழுக்கம், என்று போதிக்கிறார்கள். பட்டினி போடுகிறார்கள். ஆண், பெண் உறவுகளுக்கான எல்லா வழிகளையும் அடைக்கிறார்கள். பின்னர் 'திருமணம் செய்து கொள்ளுங்கள். இதுதான் உடலுறவுக்கான ஒரே வழி ' என்று விளம்பரம் செய்கிறார்கள். நம் இளைஞர்களும் திருமணத்திற்குப் பின்னால் ஓடி படுகுழியில் விழுகிறார்கள்.

இதில் பெரிய **சோகம்** என்னவென்றால் இவ்வாறு திருமணத்தில் விழுந்து ஏமாந்து போனவர்களும் நாளடைவில் சமூகத்தில் 'மனிதர்' என்ற அந்தஸ்தும் சொத்துரிமையும் பெற்றவுடன் தம் சொத்தையும் சமூக அந்தஸ்த்தையும் காப்பாற்றிக் கொள்வதற்காக தம் பிள்ளைகள் மீதும் திருமணத்தைத் திணிக்கிறார்கள். வில்லன் கும்பலில் சேர்ந்து விடுகிறார்கள்.

யாராவது திருமணத்தின் போலித்தனங்களை சுட்டிக்காட்டவோ தட்டிக் கேட்கவோ முனைந்தால் கலாச்சாரம், கடவுள், கத்தரிக்காய் என்று கதை விட்டு பூச்சாண்டி காட்டுகிறார்கள். இந்த பூச்சாண்டிக்கெல்லாம் நம் அறிவுள்ள இளைய சமுதாயம் எப்போதும் தலையாட்டிக் கொண்டிருக்கப் போவதில்லை.


ஆணும் பெண்ணும் சமூகத்தில் சமமான நிலைக்கு வந்து, சகஜமாகப் பழகி, பரஸ்பரம் கருத்துப் பரிமாற்றத்தில் ஈடுபடும்போது திருமணம் என்கின்ற போலி அமைப்பு உடைந்து நொறுங்கிவிடும். அந்த நாள் வெகு சீக்கிரத்தில் வந்து வீடும். ஓரளவு சுதந்திரம் கிடைத்திருக்கும் இன்றைய சமூகத்தில் பெருகிவரும் குடும்பப் பிளவுகளும் விவாகரத்துக்களும் அந்த நாள் நெருங்குவதற்கான அறிகுறிகள். வெகு விரைவில் இந்த திருமணம் ஒழிந்தே தீரும்.

திருமணத்தினை அடித்து நொறுக்க வேண்டிய நானும் நீயும் இந்த இளம் சமுதாயமும் திருமணச் சடங்குகளிற்கு ' கலாச்சார உடை ' யோடு கலந்து கொள்வது எவ்வளவு பெரிய முட்டாள்தனம்? எந்த வகையில் நியாயம்?

தயவு செய்து இது பற்றிச் சிந்தித்து எனக்குப் பதில் எழுது. எதிர்பார்க்கிறேன்.

அன்புடன்,
தோழன்.

**இந்தக்கடிதத்திற்கான பதில்களை வாசகர்களிடமிருந்து தோழன் எதிர்பார்க்கின்றார். எதிரான கருத்துக்களையும் எழுதலாம். தரமான பதில் கடிதம் ஒன்று பிரசுரமாகும். அக்கடிதத்திற்கு 250/= பெறுமதியான பரிசு வழங்கப்படும்.**



நான்
முட்களையே நேசித்ததால்
அதையே
சுவாசிக்கவும்
வேண்டியதாயிற்று
அன்றொரு நாள்,
என் மூச்சுக்காற்றில்
மூதன் முதலாய்-ஓர்
பூவின் வாசம்
முட்களே-எனக்கு
படிகளான போது
முடிவில்,
பூ மட்டும்-என்
வாடிப்போனது?
-கௌசி-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்.சரவணனுடன் ஓர் உரையாடல்

-ஏ.யதீந்திரா-

என்.சரவணன் மாற்று பத்திரிகையான சரிநிகர் ஆசிரியர் பீட அங்கத்தவர்களில் ஒருவர் தலித்தியம், பெண்ணியம் போன்ற விளிம்பு நிலை கருத்தியல்கள் தொடர்பான தேடல்மிக்க சிந்தனையாளர். அரசியல் ஆய்வாளர். பாசிச அரசியல் குறித்து தொடர்ந்து எழுதிவருபவர் தற்போது நோர்வேயில் வசிக்கும் சரவணன் 'பறை' எனும் சஞ்சிகையையும் வெளியிட்டுவருகின்றார். இவர் அண்மையில் "இலங்கை அரசியலில் பெண்களும், பெண்களின் அரசியலும்" என்ற நூலையும் வெளியிட்டிருக்கின்றார். இது இவருடைய முதல் நூல்.



*புலம் பெயர் தமிழ் சூழலில் தமிழ் தேசம் தொடர்பான அரசியல் சிந்தனை வெளிப்பாடுகள் எவ்வாறு உள்ளதென்று கூறமுடியுமா?*

இலங்கை தேசப்பிரச்சினையின் பக்க விளைவுகளில் ஓர் அங்கமாக இன்று நாம் புலம் பெயர்வையும் நோக்கலாம். இந்த புலம் பெயர்வால் எமது சந்ததியொன்று இரண்டு தசாப்த காலமாக அன்னிய தேசங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறது. அந்த சந்ததி பிறிதொரு சந்ததியை உருவாக்கியிருக்கின்ற சந்ததியாகவும் இருக்கின்றது. இவர்களுள் பொருளாதார அகதிகளாக இடம் பெயர்ந்தவர்களும், அரசியல் தஞ்சம்கோரி இடம்பெயர்ந்தவர்களும் இருக்கின்றனர். அரசியல் தஞ்சம் கோரியவர்களைப் பொறுத்தவரையில் பலர் உண்மையான அரசியல் தஞ்சம் கோரக்கூடிய தகுதியுடையவர்கள் அல்லர். எனினும் அரசியல் தஞ்சம் கோரியவர்களில் பலர் ஏதாவது ஒரு வகையில் தங்களை தேசிய விடுதலைப் போராட்டத்தோடு இணைத்துக் கொண்டவர்கள். அவர்கள் தேசிய விடுதலைப் போராட்டத்திலிருந்து அந்நியப்பட்டதற்கு பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. இவ்வாறானவர்களே ஆரம்பத்தில் புலம் பெயர் தமிழ் சூழலை அரசியல் மயப்படுத்த முற்பட்டனர். தேச விடுதலை என்பது வெறும் தமிழீழ அடைவை மட்டும் மையப்படுத்தியதாக இருக்கக்கூடாது. அதற்கு அப்பாலும் பல்வேறு விடுதலைத் தேவைகள் இருக்கின்றன. அவற்றை உள்ளடக்கிய விடுதலையே முழுமையான தேச விடுதலையாக இருக்கமுடியும் என்ற கருத்தை வலியுறுத்தி அவர்கள் நம்பிக்கையுடன் செயற்பட்டனர். உண்மையில் விடுதலைப் புலிகளை விட இவ்வாறான சிந்தனைகளில் புலம் பெயர் சந்ததிகளுக்கே அதிக பாத்திரமுண்டு எனலாம். 1980 களில் இவர்களுடைய செயற்பாடுகள் இயக்க ரீதியாக பிளவுபட்டிருந்தன. தற்போது அந்த நிலையில்லை. விடுதலைப்புலிகள் இயக்கரீதியானஅடையாளத்துடன்மட்டுமேசெயற்படுகின்றனர். தற்போது இயக்க ரீதியான செயற்பாடுகள் எல்லாம் ஓய்ந்துபோன நிலையில் அவர்கள் தமது தாயகம் தொடர்பான ஏக்கங்கள், கனவுகள், இலட்சியங்கள் என்பவற்றை இலக்கியங்கள் மூலமாக வெளிப்படுத்தி வருகின்றனர். அதனால் இதனுடைய எதிர்காலத்தை நாங்கள் பார்த்தோமேயானால் அது நம்பிக்கை தரக்கூடியதாக இல்லை.

*விளிம்பு நிலைச் சிந்தனைகளில் அக்கறை செலுத்திவரும் ஒருவர் என்ற வகையில் புலம் பெயர் தமிழ் சூழலில் அவ்வாறான சிந்தனைத் தேடல்கள் எவ்வாறுள்ளது?*

நான் ஏற்கனவே குறிப்பிட்டதுபோன்று தேச விடுதலையென்பது பல பரிமாணங்களைக் கொண்டது. பல்வேறு விடுதலைச் சிந்தனைகளை உள்ளடக்கியது. அதாவது தலித்துக்களுடைய போராட்டம், பெண்களுடைய போராட்டம், பிரதேசவாரியாக ஒடுக்கப்படுபவர்களுடைய போராட்டம், வர்க்க ரீதியான போராட்டம், ஆகியவற்றை உள்ளடக்கியதே ஒரு முழுமையான தேசவிடுதலைப் போராட்டமாக அமைய முடியும் என்ற அடிப்படையில் புலம் பெயர்ந்த தமிழ் சக்திகள் அர்ப்பணிப்புடன் செயற்பட்டனர். அவர்களுடைய அன்றைய செயற்பாடுகள் இன்றும் அதுபற்றிய சிந்தனைகள் ஓரளவு எஞ்சியிருப்பதற்கு காரணம் எனலாம். அதனால் இன்று அவ்வாறான செயற்பாடுகளின் வரட்சி காரணமாக சாதியும், ஆணாதிக்கம், பிரதேசவாதம் எல்லாவற்றையும் புலம் பெயர்ந்த தமிழ் சூழலில் அவதானிக்கமுடிகிறது. சாதிபார்த்தல் என்பது அடுத்த சந்ததிக்கும் கடத்தப்படுமோ என்ற அபாயமும் தற்போது உணரப்படுகின்றது. எமது தேசத்தில் ஒரு சந்ததியிலிருந்து மற்றொரு சந்ததிக்கு சாதி கடத்தப்படுவதென்பது பாரதூரமான விடயமல்ல. ஆனால் புலம் பெயர் சூழலில் அடுத்த சந்ததி என்பது அந்நிய தேசத்தின் பிரஜைகள், அவர்கள் தமிழீழ பிரஜைகள் அல்ல. அவர்களது தாய்மொழி தமிழாகவும் இருக்கப்போவதில்லை. அவர்களின் தாய்மொழி டொச்சாகவும், பிரஞ்சாகவும் இருக்கும். ஆகவே இந்நிலையில் அந்நிய நாட்டு பிரஜைகளாகிப் போன தமிழ் வழி சந்ததியினருக்கு சாதி கடத்தப்படுவது மிகவும் அபாயகரமானது. தற்போது இதற்கு எதிரான செயற்பாடுகள் ஒன்றுமில்லையென்பதே கசப்பான உண்மையாகும். ஆதிக்க மனோபாவம் கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடகங்கள் மூலமாகவும், பத்திரிகைகள் மூலமாகவும் முன்னைய அடக்குமுறை சிந்தனைகள் அனைத்தும் புலம் பெயர் தமிழ் சூழலில் மீள் உருவாக்கம் செய்யப்படுகின்றது.

***சமகால ஈழத்து இலக்கிய போக்கிற்கும் புலம்பெயர் இலக்கியப் போக்கிற்கும் இடையில் நீங்கள் காணும் வேறுபாடு என்ன?***

சமகால ஈழத்து இலக்கியம் என்பது இரத்தமும், சதையுமாக உயிரோடு வெளிப்படும்யதார்த்த பூர்வமான இலக்கியம். ஆனால் புலம் பெயர் இலக்கியத்தை பொறுத்தவரையில் அதன் வளர்ச்சியை நாம் பார்ப்போமானால் ஆரம்பத்தில் ஈழத்து ஏக்கங்கள், கனவுகள், கடந்தகால அனுபவங்கள் என்பவற்றை வெளிப்படுத்தும் இலக்கியங்களாகவே இருந்தன. ஆனால் தற்போதைய இலக்கிய முயற்சிகள் புலம் பெயர் வாழ்வு முறைகளை சித்தரிப்பதாகவே இருக்கின்றது. தவிர தற்போது அவர்களால் ஈழத்து பிரச்சினைகளை யதார்த்த பூர்வமாக சித்தரிக்க முடியாதுள்ளது. அவ்வாறு சித்தரிக்க முற்பட்டால் அது பொய்யாகவே இருக்க முடியும். ஆகவேஇனிவரும் காலங்களில் அவர்களுடைய இலக்கிய முயற்சிகள் எவ்வாறு அமையமுடியுமென்றால் புலம்பெயர் தேசங்களில் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளான வெள்ளைத் திமிருக்கு முகம்கொடுத்தல், அடுத்த சந்ததிக்கும் தங்களுக்கும் இடையில் உள்ள முரண்பாடுகள் என்பவற்றை உள்ளடக்கியதாக அமையும். தவிர அடிப்படையில் ஈழத்து இலக்கியத்தையும், புலம்பெயர் இலக்கியத்தையும் பிரித்து பார்க்க வேண்டியதில்லை. இன்று தவிர்க்க முடியாத வகையில் புலம்பெயர் இலக்கியம் தமிழ் இலக்கியச் சூழலில் தனித்து பார்க்க வேண்டியதாக இருக்கின்றது.

***புலம் பெயர் தமிழ் சூழலில் பெண்ணியம் தொடர்பான கருத்தாடல்கள் எவ்வாறான நிலையில் இருக்கின்றன?***

இலங்கையில் பெண்ணிலைவாத சிந்தனைகளை வளர்த்தெடுப்பதில் பல்கலைக்கழக மட்டத்தில் இருந்த குறிப்பிட்ட பிரிவினரும், விடுதலைப் போராட்டம் உருவாக்கித் தந்த பரந்த தளமுமே காரணம் எனலாம். ஆனால் புலம் பெயர் தமிழ் சூழலில் உள்ள பெண்ணிலை வாதிகளைப் பொறுத்தவரையில் அவர்களை நாம் இரண்டாகப் பார்க்கலாம்.

1) தேசத்தில் சாதாரண அறிவுத்தேடலோடு இருந்தவர்கள் அங்கு சென்றதும் பெண்ணிலை வாதிகளாக மாறினர்.

2) ஏற்கனவே விடுதலைப் போராட்டத்தில் தங்களது பங்களிப்பை வழங்கிக் கொண்டிருந்தவர்கள் போராட்டத்தில் இருந்து விலகி அங்கு சென்ற பின் தங்களை பெண்ணிலை வாதிகளாக வடிவமைத்துக் கொண்டார்கள்.

இவர்கள் அந்நிய தேசங்களில் வாழும் எமது பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு செயற்படுகின்றனர். அது இலக்கிய முயற்சியாகவும், ஏனைய செயற்பாடுகளாகவும் ஆங்காங்கு நடைபெறுகின்றன. பெண்ணிலை வாத சஞ்சிகைகளான ''சக்தி, ஊதா'' போன்றன வெளிவருகின்றன. இவை தவிர வருடாவருடம் பெண்கள் சந்திப்பு இடம் பெறுகின்றது. இதன் போது பலதரமான ஆக்கங்களை உள்ளடக்கிய சந்திப்பு மலர்கள் வெளியிடப்படுகின்றன. இவ் வருடத்திற்கான பெண்கள் சந்திப்பு ஜேர்மனியில் இடம்பெறவிருக்கின்றது. இதன்போது "பாலியல் தொழில்" தொடர்பான முழுத் தொகுப்பு நூல் ஒன்று வெளிவரவிருக்கின்றது. எனினும் இதிலுள்ள துரதிஸ்டம் என்னவெனில் அடுத்த (புதிய) சந்ததி இதனோடு இணைந்து கொள்வதில்லை. பத்து வருடங்களுக்கு முன் பெண்ணியம் பேசியவர்களே இன்றும் பெண்ணியம் பேசிக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் மத்தியிலும் குடும்பநிலை, வயதுத்துவ நிலைமாற்றம் என்பவற்றால் பெண்ணியபிரக்ஞை குறைவடைந்துவந்ததென்றே கூறவேண்டும். சிலர்தமது பெண்ணியம் தொடர்பான கருத்துக்களையும் மாற்றிக்கொண்டனர். ஆகவே தற்போதுள்ள பழைய பெண்ணிலைவாத அணி தமது பணிகளை தொடருமா என்பதே தற்போதுள்ள கேள்வி.

***மார்க்சும் எங்களை கைவிட்டுவிட்டார் என்று பெண்ணிலைவாதிகள் மத்தியிலிருந்து மேலெழும் விமர்சனங்கள் குறித்து உங்கள் கருத்து?***

அடிப்படையில் இக்கருத்து மாக்சியம் தொடர்பான மேல்தட்டு, அடிக்கட்டுமான விவாதங்களிலிருந்தே முன் வைக்கப்படுகின்றது. இது ஒரு பழமையான விவாதம். எப்பொழுதுமே அடித்தளகட்டுமானம் தான் மேல் கட்டுமானத்தை தீர்மானிக்கின்றது. அடித்தளம் என்று மார்க்ஸ் கருதுவது வர்க்கப்பிரச்சனையைத்தான். இந்த வர்க்கபிரச்சனை தீரும்பட்சத்தில் மேல் கட்டுமானம் எல்லாம்மாறும் என்பது தான் அவருடைய சாரம்சவாதம். அதனால் அவர்களுக்கு தெரியும் சிங்கள தேசமும் தமிழ் தேசமும்இணைந்து உழைக்கும் வர்க்க புரட்சியொன்றை நடத்திமுடித்து விட்டால் மட்டும்தமிழ்தேசம் விடுதலையடைய மாட்டா தென்பது. ஆகவே நாங்கள் எமது தேசவிடுதலைக்கு தனியானதொரு போராட்டத்தை வடிவமைத்துக்கொள்கின்றோம் இதே போன்றே பெண்விடுதலைக்கும் தனியானதொரு போராட்ட வடிவம் தேவைப்படுகின்றது. மார்க்சியம் எங்களுக்கு கற்றுத்தந்த பெரிய விடயம், சமூகத்தை எவ்வாறு பார்ப்பது என்ற முறையியலே. இதனுடைய நீட்சியாகத்தான் இன்று பெண்களுக்கான பிரச்சினைகளை எங்களால் தனியாக பார்க்க முடிந்தது. மார்க்சியத்தை இன்றைக்கும் அன்றைய மார்க்சியமாக வைத்திருக்கும் தந்திர மார்க்சியர்களுக்கு தான் இது பிரச்சினை. எங்களுக்கு மார்க்சியத்தில் நம்பிக்கை இருக்கின்றது. நாங்கள் நினைக்கின்றோம் அதுவிஞ்ஞானமாக இருக்குமானால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது சித்தாந்த ரீதியாக இன்றைய காலகட்டத்திற்கு ஏற்ப வளர்த்தெடுக்கப்பட்டிருக்க வேண்டும்.அவ்வாறு வளர்த்தெடுக்கப்பட்ட மார்க்சியம். இந்த பன்முகத்தன்மை வாய்ந்த பிரச்சினைகள் முழுவதையும் அடையாளம் காண்பதற்கான மார்க்சியம். எனவே மார்க்ஸ் காட்டிய வழியின்படி பெண்களுடைய பிரச்சினைகள் தனியாகப் பார்க்கப்படவேண்டியது. தவிர அவர்களுடைய பிரச்சினைகள், நிறவாதம் சம்பந்தமான பிரச்சினைகள், நுண்ணிய நிலையில் உள்ள பிரச்சினைகள் போன்ற பல்வேறு வகையான பிரச்சினைகளையும் எங்களால் தனியாக அடையாளம் காணமுடியுமென்றால் அது மார்க்சியம் காட்டிய வெளிச்சத்தால் தான் முடிகின்றது.

*தமிழ் சூழலில் அதிகதாக்கம் செலுத்தி வரும் சமீபத்திய மனோபாவமான பின் நவீனத்துவம் குறித்து உங்கள் கருத்து என்ன?*

பின் நவீனத்துவ சிந்தனை தொடர்பாக ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான விளக்கத்தை கொடுத்து வருகின்றனர். மாக்சியக் கருத்தாக்கங்கள் சம்பந்தமானவிவாதங்களில் உயர்ந்த பட்ச விவாத தொனி பொருளாகத்தான் பல துணைசித்தாந்தங்கள் வந்து குவிந்து கொண்டிருக்கின்றன. அவற்றுள் ஒன்றாக நாம் பின்நவீனத்துவத்தையும் நோக்கலாம். சிலர் பின் நவீனத்துவத்தை மாக்சியத்திற்குஎதிராகவும் புனைய முற்படுகின்றனர். சிலர் மாக்சியத்திற்கு சார்பாகவும் புனைகின்றனர். என்னளவில் பின் நவீனத்துவம் சமூக பிரச்சினைகளை இன்னும் நுணுகி ஆராய்கின்ற முறையியலை எனக்கு கற்றுத் தந்திருக்கின்றது. பின் நவீனத்துவத்திலுள்ள பாதகமான விடயங்களை விட்டுவிட்டு நாம் சாதகமான விடயங்களை மட்டும் எடுத்துக் கொள்வோம்.

---

*கேள்வி:- பொருளாதார கஷ்ட நிலையில் அன்றாட தேவைகளைக்கூட பூர்த்திசெய்ய முடிவதில்லையே இதற்கு என்ன செய்யலாம்?*

பதில் :- இதற்கு ஒரே பதில் ஒரு சோஷலிச புரட்சியினால் இந்த நாட்டில் இருக்கின்ற பொருளாதார வளத்தினை சமப்படுத்துவதுதான். இதைவிட வேறுவழியில்லை.

இவை புதிய சொற்கள் அல்ல. ஜனகருடைய காலத்திலிருந்து,தசரதனுடைய காலத்திலிருந்து, ராமனுடைய காலத்திலிருந்து நடைபெற்று வருகின்றதொரு சம்பவம். தற்போதைய நிலையில் இது புதியதொன்றல்ல. அரசியல் வாதம் என்று சொல்லக் கூடியதும் அல்ல.
எங்களுடைய புராண இதிகாசங்களில் சமப்படுத்திக்கொண்ட பொருளாதார தர்ம நிலையைத்தான் இங்கு நான் கூறுகிறேன். இதைவிட வேறு வழிகளில் பொருளாதார நிலைகளை சமப்படுத்தி குடும்பத்தில் சந்தோஷமாக இருக்க உங்களால் ஒரு போதும் முடியாது.
உதாரணமாக ஒரு குடும்பத்தில நீங்கள் பத்து பணம் சம்பாதிக்கும் போது இருபது பணம் உங்களிடமிருந்து சுரண்டப்படும் சூழ்நிலை தான் இருக்கின்றது. ஆகையால் நீங்கள் எவ்வாறு பத்து பணத்தை சேமிக்க முடியும்?...
ஒரு பொழுதும் முடியாது.
இந்த சுரண்டல் முறைகளை - அதாவது ஒரு இடத்திலிருந்து சுரண்டி எடுத்து இனனொருவர் வாழ்ந்து கொண்டிருக்கும் அதர்ம பொருளாதார முறைகளை நாங்கள் மாற்றியமைக்கும் பொழுதுதான் இந்த கேள்விக்கான சரியான விடை உங்களுக்கு கிடைக்கும். அதிலும் சரியானதொரு சமதர்ம சோஷலிச புரட்சியினால் மாத்திரம் தான் பரவலாக உண்டு பண்ண முடியுமே தவிர தனிப்பட்ட ரீதியில் ஒரு பொழுதும் செயல் படுத்த முடியாது. ஒருநல்ல மார்க்கம் என்று கூறுவதனால் இந்த நாட்டில் உங்களைப்போல இருக்கும் எல்லோரும் ஒன்று கூடி நான் கூறிய இந்த கருத்துக்களை சிந்தித்து ஒருமித்து நின்று செயலாற்ற வேண்டும்.

சொல்வதை சரியாக சொல்ல வேண்டும்.
உண்மையை உண்மையாக காண வேண்டும்.
உண்மையை உண்மையாக செயற்படுத்த வேண்டும்.
அப்பொழுதுதான் உண்மையான விடிவு காலம் வரும்.

- சுவாமி கெங்காதரானந்தாஜீ -

நன்றி
'அமிர்தத்துளிகள்'
- தி. சியாமளாதேவி-
(சிவயோக சமாஜம் வெளியீடு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகல விதமான கட்டடப்பொருட்களுக்கும்

**NEW GOPALAN COMPANY**
**28,SEAVIEW ROAD,**
**TRINCOMALEE.**

**026-22619**
**026-22405**

**உப்புவெளி மெடி கிளினிக்**

மருத்துவத்திற்கும் மருந்திற்கும்

உப்புவெளி மெடி கிளினிக் ,
உப்புவெளிச்சந்தி,
திருக்கோணமலை.

விளக்கின் மீது நீங்கள் செய்யும் விமர்சனங்கள் அனைத்தும் வெறும் பேச்சாக மட்டும் இருக்க வேண்டாம்.எழுத்து மூலமாக செய்யப்பட்டால் மாத்திரமே கவனத்தில் கொள்ளப்படும்.

தற்போது விளக்கு மாத இதழினை திருக்கோணமலை நகரத்தின் சகல முக்கிய புத்தகசாலைகள் மற்றும் கிண்ணியா "எவர்சைன்" பதிப்பகத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

**விமர்சனங்கள் வந்தேயாக வேண்டும்!**
**விவாதங்கள் நடந்தே தீர வேண்டும்!**

சமாதானத்தை வரவேற்று
திருக்கோணமலை "சுப்பர் சங்கீத்" இசைக்கழகத்தினால்
நடாத்தப்படும்

**"சமாதான இசை இரவு"**

இடம் : நகராட்சிமன்ற மைதானம்
காலம் : 07-07-2002
நேரம் : மாலை 7 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமக்கேயான புல்வெளி

-ஆகாசன்-

மேய்ப்பனே!
எனதருமை மேய்ப்பனே!
எனது மந்தையிலிருந்து
எத்தனை ஆடுகள் காணாமற் போயின
எத்தனை ஆடுகள் காவு போயின
நீர் அறிவீர் நான் அறிவேன் நாம் அறிவோம்
எனக்கான மேய்ச்சல் மறுதலிக்கப்பட்டு
எனக்கான நீர்நிலை பறிக்கப்பட்டு
நான் அநாதரவான போதே
நீர் வந்தீர் மீட்கும் ஒரு கைத்தடியுடன்

என் முப்பாட்டனின் முப்பாட்டனுக்கு
ஒரு புல்வெளி இருந்தது
ஒரு நீர்நிலையுமிருந்தது
அது எனக்கேயான புல்வெளி
அது எனக்கேயான நீர்நிலை
ஓநாய்களின் அசுர வருகையின்போது
அது கைநழுவிப்போயிற்று.

ஒவ்வொரு தடவையும்
புன்னகைத்துக் கைகுலுக்கி சிநேகமாய்
சேர்ந்துவந்து சேர்ந்திருந்தே
வஞ்சிக்கப்பட்டேன்
வகையின்றித் தொகையின்றி வயதின்றி
வஞ்சிக்கப்பட்டேன்
அவை அறிந்தே செய்தன செய்கின்றன
அவைகளை மன்னியாதீர் நம்பாதீர்

நம் புல்வெளி நமக்கேயான புல்வெளி
நம் நீர்நிலை நமக்கேயான நீர்நிலை
நமக்கென நிரந்தரிக்கப்படுகிற வரையில்
உம் கைத்தடியை கைவிட வீச
விடேன் விடோம்.



-எல்லாளன்-

ஏதாவது
எழுதியாக வேண்டும்

உறவுகள்
என்
உணர்வுகளை
உணர்ச்சிகளை
உடைத்தெறிந்தால்
நான்
விதைபடப்போவதில்லை.

என்
வரிகளையாவது
நான்
விதைத்தாக வேண்டும்.

நான்
ஏதாவது
எழுதியேயாக வேண்டும்

மூடி திறந்து
பேனா குற்றியபோது
முற்றுப்புள்ளியே
முடியாமல் இருந்தது.
என்னைப் போலவே
பேனாவும் இருந்தது
எனக்கு
தெரியாமல் போனது.

இருந்தும்
எழுதவே போகிறேன்
என்
இறுதித்துளி இரத்தம்
இருக்கிற வரைக்கும்
பேனா எதற்கு?
ஏதாவது
எழுதவே போகிறேன்.

என் வரிகளாவது
விதைபட்டாக வேண்டும்.

COLEX - 01-592292

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org